ஞாயிறு தினக்குரல் வாரமலர் THINAKKURAL
AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL
Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com
ஓசை : 020 குரல் : 273 ஞாயிற்றுக்கிழமை 12 டிசம்பர் Sunday 12th December 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 40/- பக்கங்கள் : 28


## கொரோனாவால் 22 பேர் உயிரிழப்பு

இலங்கையில் மேலும் 22 கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று அறிவித்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பதிவான இந்த மரணங்களுடன் நாட்டில் பதிவான கொவிட் மரணங்களின்

பக்கம் 02

## மீண்டும் அரை மணி நேர மின் வெட்டு

நாட்டின் மீண்டும் சில நாட்கள் சுழற்சி முறையில் அரை மணி நேர மின்சார விநியோகத் தடை அமுலாகவுள்ளது.

நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தில் உள்ள நான்கு மின் பிறப்பாக்கிகளில் ஒன்று பழுதடைந்த நிலையில்

பக்கம் 02

# 13 ஐ அமுல் செய்ய உதவுமாறு இந்தியாவை கூட்டாக கோர முடிவு

**தமிழ் கட்சிகள் கொழும்பில் இன்று கூடுகின்றன**

ரொஷான் நாகலிங்கம்

அரசியலமைப்பிலுள்ள 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் நடவடிக்கை எடுக்குமாறு இந்தியாவை ஒன்றிணைந்து வலியுறுத்த தமிழ் கட்சிகள் சில கொழும்பில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஒன்று கூடுகின்றன.

பக்கம் 02






## இலங்கை படைத் தரப்பினர் மீதான அமெரிக்காவின் தடைக்கு வரவேற்பு

**-பாதிக்கப்பட்டவர்களுக்கான நம்பிக்கை விதை என்கிறார் ஜஸ்மின் சூக்கா -**



இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் மேலும் இரண்டு இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளதை பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் மனித உரிமைகள் குழுக்கள் வரவேற்றுள்ளன.

அமெரிக்காவின் இந்தத் தடை பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கான நம்பிக்கை விதையாகும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் (ITJP) வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பக்கம் 02

# இலங்கை படைத் தரப்பினர் இருவருக்கு அமெரிக்கா தடை

**மனித உரிமை மீறலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நடவடிக்கை**

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இரண்டு இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான தடைகளை அமெரிக்க வெளியுறவுத்துறை மேலும் விரிவுபடுத்தியுள்ளது.

அமெரிக்காவின் விரிவுபடுத்தப்பட்ட

பக்கம் 02




## புதிய சுகாதார வழிகாட்டல் ஜனவரி -01 முதல் நடைமுறை

**-மேலும் சில தளர்வுகள் அறிவிப்பு -**

இலங்கைக்கு வரும் 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனையின் எதிர்மறை அறிக்கை அவசியமில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தென்னாபிரிக்கா, பொட்ஸ்வானா, லெஸதோவா, நமீபியா, சிம்பாப்வே மற்றும் ஸ்லோவாக்கியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளுக்கு விதிக்கப்பட்ட பயணத்தடை நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

புதிய சுகாதார வழிகாட்டலில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பயணிகள்

பக்கம் 02

## சாணக்கியர்களின் கருத்து பகிர்வு; சுமந்திரன், சாணக்கியன் தனி வழி

**-ஆதரவாளர்களை திரட்டி இருவரும் கூட்டம்**



தமிழர்தம் அபிலாசைகளில் சர்வதேச நாடுகளின் கரிசனை தொடர்பாக சாணக்கியர்களின் கருத்துப் பகிர்வு என்ற தலைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் சாணக்கியன்

பக்கம் 02

## பொத்துவிலில் புதிதாக முளைத்த புத்தர்சிலை

**-இரவோடு இரவாக இரகசிய நடவடிக்கை -**



அம்பாறை - பொத்துவில் பிரதேச சங்கமன்கண்டி படிமலையடிவாரத்தில் இரவோடு இரவாக அடையாளம் தெரியாத நபர்களினால் புத்தர் சிலை வைக்கப்பட்டதால் அப்பிரதேசத்தில் நேற்று காலை முதல் பதற்ற நிலை ஏற்பட்டது.

புத்தர் சிலையை அவ்விடத்திலிருந்து

பக்கம் 02

## அரச திணைக்கள தேசிய தரப்படுத்தலில் யாழ். மாவட்ட செயலகம் முதலிடம்

**-மக்கள் சேவைக்கு கிடைத்த வெற்றி என்கிறார் அரச அதிபர்**

அரச துறை நிறுவனங்களுக்கான வினைத்திறனான சேவையை மதிப்பிடும் பொருட்டு தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தால் 2018 /2019ம் ஆண்டினை தழுவி நடாத்தப்பட்ட 2020-ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டித் தொடரில் தேசிய ரீதியில்



யாழ்.மாவட்ட செயலகம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

அரச துறையில் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான போட்டித் தொடரில் பங்குகொண்ட 14 பிரதேச செயலகங்களும் வெற்றி பெற்றுள்ளன .

அந்த வகையில் தெல்லிப்பழை பிரதேச செயலகம் முதலாம் இடத்தினையும் யாழ்ப்பாணம்,

பக்கம் 02

## உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஏற்பாடுகள் ஆரம்பம்



உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள், தேர்தல் கட்டமைப்பு மற்றும் விதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை

பக்கம் 02






## 250 கிலோ ஹெரோயினுடன் வெளிநாட்டுக் கப்பல் சிக்கியது

**-சர்வதேச கடற்பரப்பில் கடற்படை அதிரடி-**

சர்வதேச கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையில் பெருமளவான போதைப் பொருட்களை ஏற்றிச் சென்ற ஈரானைச் சேர்ந்த மீன்பிடிக் கப்பல் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் இருந்த 06 சந்தேகநபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீன்பிடி கப்பலில் இருந்து 225 பொதிகளில்

பக்கம் 02

## 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு பூஸ்டர் தடுப்பூசி அவசியம்

**-தவறாது பெறுமாறு யாழ். அரச அதிபர் கோரிக்கை -**



யாழ் மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடுப்பூசியாக வழங்கப்படும் பைசர் தடுப்பூசியினை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில்

பக்கம் 02

## புதிய அரசியல் நகர்வு; திட்டமிடும் மைத்திரி

**-புதியதொரு கூட்டணியை வலியுறுத்துகிறார்**



நாட்டில் நிலவும் முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அரசியல்வாதிகள் மற்றும் ஏனைய தரப்பினர் இணைந்து புதிய கூட்டணி ஒன்றை உருவாக்க வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும்

பக்கம் 02

## குண்டு வெடிப்பால் அமைந்த அரசு காஸ் குண்டுவெடிப்பால் கலையும்

**-ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு -**

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதலே அரசாங்கம் ஆட்சிக்கு வர அடிப்படை காரணமாக இருந்தது. இந்த அரசின் ஆட்சியில் தற்போது வீடுகளில் சமையல் எரிவாயு குண்டு வெடிக்கிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்



பக்கம் 07

## உள்ளூராட்சி ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளம் காண்பது தொடர்பில் இடம்பெற்ற நாடாளுமன்ற தெரிவுக்குழு கூட்டத்தில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பிரதேச சபை, நகர சபை மற்றும் மாநகர சபைகளுக்கான பதவிக்காலம் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி நிறைவடையவுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு சுமார் 4 மாதங்களுக்கு முன்னரே தயார் நிலையில் இருக்க வேண்டியது அவசியம். மாற்றங்கள் இன்றி தற்போதைய சட்ட முறைமையின் கீழ் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதாக இருந்தால், 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் தேர்தலுக்கான திகதியை அறிவிக்க நேரிடுமென அவர் கூறினார். அடுத்த பாராளுமன்ற தெரிவுக்குழு கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக பாராளுமன்ற ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச)

## அரச திணைக்கள ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்மராட்சி, பருத்தித்துறை பிரதேச செயலகங்கள் இரண்டாம் இடத்தினையும் சண்டிலிப்பாய், கோப்பாய், கரவெட்டி மற்றும் மருதங்கேணி பிரதேச செயலகங்கள் மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளன.

மேலும், உடுவில் ,காரைநகர், சங்கானை, ஊர்காவற்றுறை ,மற்றும் வேலணை பிரதேச செயலகங்கள் சிறப்பு மெச்சுரை விருதினையும் நெடுந்தீவு பிரதேச செயலகம் மெச்சுரை விருதினையும் பெற்றுள்ளது .

அந்தவகையில் யாழ். மாவட்ட செயலகம் தேசிய ரீதியாக மாவட்ட தரப்படுத்தலில் முதலிடம் பெற்றிருப்பதுடன் பங்குபற்றிய 14 பிரதேச செயலகங்களும் பொதுமக்கள் சேவை வழங்கலில் சிறந்த அங்கீகாரத்திற்கான அடையாளத்தை வெளிப்படுத்தியுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

இவ்வெற்றியானது யாழ்.மாவட்டம் முழுவதுமான நிர்வாக ரீதியாக கிடைத்த சிறந்த அங்கீகாரம் ஆகும் எனவும் அவர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

இது பொது மக்கள் சேவை வழங்கலில் உத்வேகம் மற்றும் ஊக்கத்தை மாவட்ட ரீதியாக எடுத்துக்காட்டுவதுடன், எதிர்காலத்திலும் வினைதிறனுடன் பொதுமக்கள் திருப்தியுறும் வகையில் சேவை வழங்கலில் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் வலுப்பெறும்.

இவ்விருதினை பெற்றுக்கொள்ள முழுமையான ஒத்துழைப்பை வழங்கிய மாவட்ட மற்றும் பிரதேச செயலக அனைத்து உத்தியோகத்தர்களும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளதுடன், இச்செயற்பாட்டிற்கான பலமான உற்பத்தித் திறன் கட்டமைப்பினை வடிவமைத்து வழிகாட்டல்களை அவ்வப்போது வழங்கியிருந்த உற்பத்தித்திறன் குழுவினருக்கு விசேட நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதாக மாவட்ட அரசாங்க அதிபர் கூறினார்.

அதேவேளை இப்போட்டித் தொடரில் கடந்த 2016 ஆம் ஆண்டில் யாழ். மாவட்ட செயலகம் 3-ஆம் இடத்தையும் 2018 ஆம் ஆண்டில் 2-ஆம் இடத்தையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-75)

## இலங்கை படைத் தரப்பினர் இருவருக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைப் பட்டியலில் கொழும்பில் 2008 / 09 காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முக்கிய சந்தேக நபராக குறிப்பிடப்படும், இலங்கை கடற்படையின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான நேவி சம்பத் என அழைக்கப்படும் லெப். கொமாண்டர் சந்தன ஹெற்றியாராச்சி மற்றும் யாழ்ப்பாணம் - மிருசுவில் பகுதியில் சிறுவர்கள் உட்பட எட்டு தமிழர்களை கொலை செய்த குற்றச்சாட்டின் கீழ் மரண தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்ட முன்னாள் இராணுவ சார்ஜன்ட் ஆர்.எம். சுனில் ரத்நாயக்க ஆகியோரே உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தடைப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் அமெரிக்காவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில், இலங்கை இராணுவத்தளபதி சவேந்திர சில்வா அமெரிக்காவிற்குள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்ட நிலையில் இப்போது மேலும் இருவர் இத்தடைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் எங்கு நடந்தாலும் அவற்றின் மீது கவனத்தை ஈர்க்கவும் பொறுப்புக்கூறலை மேம்படுத்தவும் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம் எனவும் அமெரிக்கா கூறியுள்ளது.

கொழும்பில் 2008 / 09 காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முக்கிய சந்தேக நபராக குறிப்பிடப்படும், சிறிலங்கா கடற்படையின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான சந்தன ஹெற்றியாராச்சி கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இதேவேளை, அமெரிக்காவில் விரிவுபடுத்தப்பட்ட தடைப் பட்டியலில் இலங்கை இராணுவத்தைச் சோ்ந்த இருவர் உட்பட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய பல்வேறு நாடுகளைச் சோ்ந்த 15 பேர் மற்றும் 10 நிறுவனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## மீண்டும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது தேசிய மின் கட்டமைப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளது.

இதனால் எதிர்வரும் தினங்களில் நாளாந்தம் மாலை 6.30 தொடக்கம் 9.30 மணி வரையான காலப்பகுதியில் 30 நிமிட மின் விநியோகத் தடை நாட்டின் சில இடங்களில் பதிவாகும் என்று சக்தி வலு அமைச்சு அறிவித்துள்ளது.

மின்பிறப்பாக்கியை திருத்தும் பணி இடம்பெற்று வருகிறது. அது சீரமைக்கப்படும் வரையிலேயே இந்த மின்வெட்டு அமுலாகும் என அமைச்சர் காமினி லொக்குகே நேற்றிரவு உறுதி செய்தார்.

## கொரோனாவால் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொத்த எண்ணிக்கை 14,595 ஆக அதிகரித்துள்ளது. வெள்ளிக்கிழமை இறந்தவர்களின் 15 ஆண்களும் 07 பெண்களும் அடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 60 வயதுக்கு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

60 வயதுக்கு மேற்பட்டவர்களில் சுமார் 30 ஆயிரம் பேர் இதுவரை பைசர் பூஸ்டர் தடுப்பூசியினை பெற்றுக்கொண்டுள்ளனர். தற்போது நாட்டில் புதிய வகை வைரஸ் திரிபு கண்டறியப்பட்டுள்ள நிலையில் அதனை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம்.இந்நிலையில் தடுப்பூசியின் அவசியத்தை கருத்தில் கொண்டு தகுதியுடைய அனைவரும் மூன்றாவது தடுப்பூசியை தவறாது பெற்றுக் கொள்ள முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-75)

## புதிய அரசியல் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். யார் மீதும் விரலை நீட்டி குற்றம் சாட்டுவதற்குப் பதிலாக, நாட்டில் உள்ள பிரச்சினைகளை எதிர்கொள்ள புதிய அரசியல் கூட்டணி உருவாக்கப்பட வேண்டும் என நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறினார். ஊழலற்ற நாட்டை நேசிக்கும் அரசியல்வாதிகள் மற்றும் ஏனையோர் இணைந்து புதிய கூட்டணியை உருவாக்க வேண்டும். நாட்டின் எதிர்காலத்திற்காக இவ்வாறானதொரு சக்தி உருவாக வேண்டிய தருணம் வந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிய கட்சி அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 6 மாதங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒரு வலுவான அரசியல் சக்தியாக மாறும் என நம்புவதாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (ச)

## பொத்துவிலில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகற்றுமாறு கோரிக்கையை முன்வைத்து அப்பகுதி அரசியல் வாதிகள் மற்றும் பொது மக்கள் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அம்பாறைமாவட்ட பொத்துவில் பிரதேச செயலாளரின் நிர்வாக எல்லைக்குட்பட்ட தாண்டியடி, சங்கமன்கண்டி -படிமலை அடிவாரத்திலேயே இரவோடு இரவாக புத்தர் சிலை வைக்கப்பட்டது. இதனையடுத்து தாண்டியடி மற்றும் சங்கமன்கண்டி கிராம மக்கள் அணிதிரண்டு புத்தர் சிலை வைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் புத்தர் சிலையை உடனடியாக அங்கிருந்து அகற்றக் கோரியும் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற திருக்கோவில் காவல்துறையினர் கலவரங்கள் எற்படாதவாறு நிலைமைகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.திருக்கோவில் பொத்துவில் காரைதீவு ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உதவி தவிசாளர் மற்றும் பொத்துவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர் ஆகியோரும் சம்பவ இடத்திற்கு வருகைதந்து நிலைமைகளை ஆராய்ந்தனர்.

மக்கள் பிரதிநிதிகள் பொத்துவில் மூகுது மஹா விகாராதிபதியிடம் புத்தர் சிலையை அகற்றுமாறு கலந்துரையாடல்களில் ஈடுபட்டபோதும் பௌத்த துறவி இவ்விடயம் தமக்கு உரியது என தெரிவித்து அவர்களின் கோரிக்கையை மறுத்தார்.

இதனையடுத்து காரைதீவு தவிசாளர் கே.ஜெயசிறில், திருக்கோவில் பிரதேசசபை தவிசாளர் இ.வி.கமலராஜன் மற்றும் பொத்துவில் உதவி தவிசாளர் பார்த்தீபன் உட்பட பல பிரமுகர்களும் மற்றும் கிராம மக்களும் வீதியில் அமர்ந்து தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

இந்த நிலையில் 2 நாட்களுக்குள் புத்தர் சிலையை அகற்றுவதாக திருக்கோவில் காவல்துறையினர் உறுதியளித்த நிலையில் மக்கள் அங்கிருந்து சென்றுள்ளனர். இதனையடுத்து புத்தர் சிலைக்கு பாதுகாப்பாக காவல் துறையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ச)

## புதிய சுகாதார ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டிற்கு வருவதற்கு 72 மணி நேரத்திற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் சோதனையின் எதிர்மறையான பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். பயணிகள் கடந்த மூன்று மாதங்களுக்குள் கோவிட்-19 நோய்த்தொற்றின் அறிகுறிகளை கொண்டிருந்தால் பி.சி.ஆர் பரிசோதனைக்குப் பதிலாக, அவர்கள் புறப்படுவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்னதாக நடத்தப்பட்ட ஆன்டிஜென் சோதனையின் எதிர்மறை அறிக்கையுடன் வரவேண்டும் என்றும் அவர் கூறினார்.

அத்துடன், விமான நிலையங்கள் வழியாக இலங்கைக்கு வரும் அனைத்து பயணிகளும் இணையவழி சுகாதாரப் பிரகடனப் படிவத்தை தனித்தனியாகப் பூர்த்தி செய்து அவற்றுடன் தடுப்பூசிப் பதிவு, கொவிட்-19 எதிர்மறை மருத்துவ அறிக்கை உள்ளிட்டவற்றை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

விண்ணப்பிக்கும் பயணிகளுக்கு தனியான இணைய குறியீடு வழங்கப்படும். நாட்டுக்குள் வரும்போது இதனைக் கொண்டு வர வேண்டும்.

இந்த திட்டங்கள் யாவும் 2022, ஜனவரி 01-ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார். (ச)

## 13 ஐ அமுல் செய்ய ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை வலியுறுத்தி இந்தியாவுக்கு கூட்டாக கடிதம் எழுத தமிழ் கட்சிகள் தீர்மானித்துள்ளன. தமிழ்கட்சிகளை ஒன்றிணைத்து இதற்கான வரைபை வரைவதற்கான கூட்டத்தை கடந்த நவம்பர் 2 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ரெலோ அமைப்பினர் நடத்தினர். இதில் தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், . ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழ் தேசிய கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, புளொட் ஆகிய கட்சிகள் பங்கொண்டன.

இக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சி கலந்துகொள்ளவில்லை. நேரமின்மையால் இதில் பங்கேற்க முடியவில்லை என அக்கட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில் இந்தச் சந்திப்பை முடித்த பின்னர் மனோகணேசன், ரவூப் ஹக்கீம் ஆகியோர் கொழும்பு சென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை சந்தித்துப் பேசி தமிழரசுக் கட்சி கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென வலியுறுத்தினர்.

இந்நிலையில் இன்று கொழும்பில் நடைபெறவுள்ள தமிழ் கட்சிகளின் ஒன்றுகூடலில் இரா.சம்பந்தன் கலந்துகொள்வார் என கூறியதாக ரெலோ தெரிவித்துள்ளது.

இந்தக் கூட்டத்தின்போது அரசியலமைப்பில் உள்ளவாறு 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி மாகாண சபைத்தேர்தலை நடத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு இந்தியாவைக் கோரும் கடிதத்தில் கட்சித் தலைவர்களால் கையெழுத்திடவுள்ளதாக தெரியவருகிறது.

இவ்வாறு கையெழுத்திடும் கடிதத்தை இந்திய தூதரகத்திற்கு வழங்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

## 250 கிலோ ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 250 கிலோவுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இலங்கை கடற் படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் உதவியுடன் இலங்கைக்கு தெற்கே 900 கடல் மைல் தொலைவில் உள்ள சர்வதேச கடற்பரப்பில் வைத்து போதை பொருட்களுடன் வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல் மடக்கப்பட்டது.

இதேவேளை, சர்வதேச கடற்பரப்பில் கடற்படையினரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்ட மீன்பிடிக் கப்பல் இன்று அல்லது நாளை இலங்கை கரைக்கு கொண்டுவரப்படவுள்ளது.

போதைப் பொருட்களுடன் இந்தக் கப்பல் மற்றும் அதில் இருந்த போதைப்பொருள் கடத்தல்காரர்கள் 06 பேரும் சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். (ச)

## இலங்கை படைத் தரப்பினர் மீதான... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2008 மற்றும் 2009 களில் வலிந்து காணாமற்போதல்களுடன் தொடர்புபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கைக் கடற்படையின் புலனாய்வு அதிகாரி ஒருவரையும் 2000 இல் தமிழர்கள் நீதிக்குப் புறம்பான முறையில் கொல்லப்பட்டமையுடன் குற்றங்காணப்பட்டு பின்னர் சர்சைக்குரிய வகையில் பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரையும் அமெரிக்க அரசாங்கம் தடை செய்திருப்பதை பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் மனித உரிமைகள் குழுக்கள் என்பன வரவேற்றுள்ளன. சந்தன ஹெட்டியாராச்சி மற்றும் சுனில் ரத்நாயக்கா ஆகிய இருவருமே அவர்கள் ஆவர்.

லெப் கொமாண்டோர் சந்தன ஹெட்டியாராச்சி ஒரு கடற்படைப் புலனாய்வு அதிகாரியாக இருந்ததுடன் அவர் ஒரு பிரதான சந்தேக நபராக இருந்தார். இவர் கோட்டை நீதிமன்றத்தினுடைய திருகோணமலையில் 11 பேர் கடத்தல் சம்பவம் தொடர்பான வழக்கில் நீதியிலியிருந்து தப்பியிருந்ததுடன், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரான நடராஜா ரவிராஜ் கொலையில் குற்றவாளிகளில் ஒருவராக இருந்த இவர் சிங்கள நீதிபதி ஒருவரால் குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்டார்.

இலங்கை நீதிமன்ற ஆவணங்களின் படி , ஹெட்டியாராச்சி கடத்தல்கள் மற்றும் காணாமற்போதல்களுக்குப் பொறுப்பான இரண்டு விசேட புலனாய்வு அணிகளில் ஒன்றினை வழிநடாத்தியதாக சொல்லப்படுகிறது. இது பிரதானமாக கொழும்பில் இருந்து இயங்கியது ஆனால் கைதிகளை வான்களில் திருகோணமலையில் உள்ள கடற்படைத்தளத்திற்கு அனுப்பி வந்தது. இவர் கொழும்பில் பின்னர் கடற்படைத் தளபதியாக இருந்த வசந்த கருணாகொடவின் உதவி அதிகாரியுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றியிருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. அதே நீதிமன்ற வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த வசந்த கருணாகொடவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்னெடுத்துச் செல்வதில்லை என புதிய அரசாங்கம் தீர்மானித்த பின்னர் இந்த வாரம் அவர் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

மூன்று சிறார்கள் உட்பட 2000 ஆம் ஆண்டில் 08 தமிழ்ப் பொதுமக்கள் கொலை செய்யப்பட்டது தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட பின்னர் 2020 இல் முன்னாள் அதிகாரி சார்ஜன்ட்களில் ரத்நாயக்கவிற்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. இவரது வழக்கு இலங்கையில் போர்க் குற்றங்களுக்காக ஒரு இராணுவ வீரர் மீது தொடுக்கப்பட்ட மிகவும் சில வழக்குகளில் ஒன்றாகும். அத்துடன் அவருக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பானது சர்வதேச ரீதியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியதுடன் உள்நாட்டுப் பொறுப்புக்கூறலானது. இப்போது சாத்தியமற்றது என்பதையும் சுட்டிக்காட்டியது.

ஐ.ரி.ஜே.பி. இன் 2019 கடற்படை பற்றிய அறிக்கையானது கடற்படையினரால் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய பொலிஸ் விசாரணையின் போது இலங்கையில் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களை விரிவாக ஆராய்ந்துள்ளதுடன் அதனை ஏனைய உயிர்தப்பியவர்கள், கண்ணால் கண்டசாட்சிகள் மற்றும் உள்தகவலாளர்கள் மற்றும் அப்போது கட்டளை அமைப்பில் இருந்தவர்கள் ஆகியோரால் வழங்கப்பட்ட வாக்குமூலங்களுடன் குறுக்கு குறிப்புச் செய்துள்ளது.

குறைந்தது 2008 - 2014 வரையான காலப்பகுதியில் கடற்படை முகாம்களுக்குள் இடம் பெற்ற சித்திரவதை காணாமற்போதல் மற்றும் கொலை என்பவற்றுடன் இலங்கைக் கடற்படையின் உயர் அதிகாரிகளுக்கு தொடர்பு இருந்ததாக இந்த ஆய்வு கண்டுபிடித்ததுடன், இதனைத் தொடர்ந்து இலங்கைக் கடற்படையினருடனான ஈடுபாடுகளை விசாரணை செய்ய வேண்டும் என ஐ.ரி.ஜே.பி. அழைப்பு விடுத்தது.

இது கீழ் மட்டத்திலுள்ள குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிரான விசா தடை என்பது மட்டுமல்லாமல் அவர்களது கட்டளை அதிகாரிகளுக்கான ஒரு எச்சரிக்கையுமாகும். இவர்களில் பலர் இன்னமும் அதிகாரம் மிக்க பதவிகளில் உள்ளார்கள் அவர்களும் மிகவும் ஆபத்தில் உள்ளார்கள் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுக்களை கைவிடுவதற்கு சிபாரிசு செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுக்களை உருவாக்குதல் மற்றும் ஜனாதிபதியின் பொதுமன்னிப்புக்கள் போன்ற பாரிய மனித உரிமை மீறல்களுக்கு பதில் கூறுவதற்கான வழக்கினை இன்னமும் எதிர்கொண்டுள்ள கட்டளை அதிகாரிகளைப் பாதுகாப்பதற்கு உதவமாட்டாது. என அவர் மேலும் தெரிவித்தார்.

## சாணக்கியர்களின் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் தமது ஆதரவாளர்களைத் திரட்டி யாழ்ப்பாணத்தில் நேற்று கூட்டமொன்றை நடத்தினர். நேற்று பிற்பகல் 3 மணியளவில் சுன்னாகத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் சமகால அரசியல் நிலைவரம் குறித்துக் கருத்துக்களை பகிர்ந்துகொண்டதுடன், பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். (ச-40)

# புலிகளை விடுவித்தால்தான் கூட்டமைப்பின் ஆதரவு கிடைக்குமெனில் அது தேவையில்லை

## -சீறும் அமைச்சர் மஹிந்த அமரவீர-



முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை விடுதலை செய்துதான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற வேண்டும் என்றால் அத்தகைய ஆதரவு அரசாங்கத்துக்கு தேவையில்லை. அவர்களின் வாக்குகளும் எமக்கு தேவையில்லை என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி இராசமாணிக்கம் சாணக்கியன் நிதியமைச்சின் வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது, முன்னாள் புலி உறுப்பினர்களான தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். அதன் மூலம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதரவையும் அரசாங்கம் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் மஹிந்த அமரவீர தனது உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்:-

இந்த நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் உருவாகவோ அல்லது விடுதலைப்புலிகள் தலைதூக்கவோ இடமளிக்கப் போவதில்லை. அவ்வாறான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் போவதில்லை. அவ்வாறு அவர்களின் நிபந்தனையுடன்தான் அவர்களது வாக்குகளை பெற்று கொள்ள வேண்டி நேரிட்டால், அவ்வாறான வாக்குகள் எமக்குத் தேவையில்லை. எமது அரசாங்கத்திற்கு பெரும்பான்மை பலம் உள்ளது.

எதிர்வரும் தேர்தலிலும் நாமே வெற்றி பெறுவோம். தேவையற்ற நிபந்தனைகளுடன் நாம் எவரது ஆதரவையும் நாடப்போவதில்லை அவ்வாறான சிந்தனையுடையவர்களின் ஆதரவு எமது அரசாங்கத்திற்குத் தேவையில்லை அவர்களே அதனை வைத்துக் கொள்ளட்டும் என்றார்.

# உர இறக்குமதி விண்ணப்பங்கள் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை

## -இதுவே தாமதமாவதற்கான காரணம்-



இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், அதற்கான விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் இதுவரையில் சமர்ப்பிக்கவில்லை என தேசிய உர செயலகம் தெரிவித்துள்ளது.

இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு தடைவிதிக்கும் வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்து நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நவம்பர் 30 ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தார்.

இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை எவ்வித விண்ணப்பங்களும் முன்வைக்கப்படவில்லை என தேசிய உர செயலகம் தெரிவித்துள்ளது.

குறித்த விண்ணப்பங்களை சமர்பித்ததன் பின்னர் உரத்தை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவதுடன் சில கட்டுப்பாடுகள் குறித்தும் பரிசீலிக்கப்படும் என தேசிய உர செயலகம் தெரிவித்துள்ளது.

# நாட்டில் 11 இலட்சத்திற்கு அதிகமானோருக்கு பூஸ்டர்

நாட்டில் நேற்று வரை 11 இலட்சத்து 15 ஆயிரத்து 666 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ் போடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு தொற்று நோயியல் பிரிவு இதனை குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரை ஒரு கோடியே 59 இலட்சத்து 50 ஆயிரத்து 998 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸும், ஒரு கோடியே 37 இலட்சத்து 79 ஆயிரத்து 835 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் போடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# கைதிகளுக்கிடையில் மோதல்; பதுளை சிறையில் 5 பேர் காயம்

பதுளை சிறைச்சாலையில் கைதிகளுக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த மோதல் சம்பவத்தில் 5 கைதிகள் காயமடைந்துள்ளதாகவும் காயமடைந்த கைதிகள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த மோதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் பேச்சாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிக விலைக்கு சீமெந்து விற்பனை செய்பவர்களை கண்டறிய நடவடிக்கை

சீமெந்து நிறுவனங்களால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையை விடவும் அதிக விலைக்கு சீமெந்து மூடைகளை விற்பனை செய்பவர்களை கண்டறிய விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நுகர்வோர் விவகார அதிகார சபையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போது ஒரு மூடை சீமெந்துக்கு நிறுவனங்கள் நிர்ணயம் செய்யும் அதிகபட்ச சில்லறை விலை 1,275 ரூபாவாகும்.

எனினும், அந்த விலையை விட அதிக விலைக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சீமெந்து மூடைகள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தரப்பில் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

# சிவனொளிபாதமலை யாத்திரை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை



இரத்தினபுரி மாவட்ட மக்களுக்கு தேவையான தடுப்பூசிகளை எவ்வித குறைபாடுகளுமின்றி பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

சிவனொளிபாத மலை யாத்திரை சுகாதார பிரிவினர்களின் ஆலோசனைக்கமைய ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

இரத்தினபுரி மாவட்ட கொரோனா தொற்று தடுப்பு பிரிவு குழு கூட்டம் 7 ஆம் திகதி நடைபெற்ற போதே ஆளுநர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இதுவரை 43,981 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த நவம்பர் மாதம் மட்டும் 3,989 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை சிவனொளிபாத மலை யாத்திரை எதிர்வரும் 18 ஆம் திகதி பௌர்ணமி தினத்தன்று ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எரிவாயு வெடிப்பு தொடர்பான விசாரணைகள் நிறைவு

எரிவாயுவுடன் தொடர்புடைய வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய நியமிக்கப்பட்ட விசேட நிபுணர் குழு, இது தொடர்பான விசாரணைகளை நிறைவு செய்துள்ளது.

இந்த தகவல்கள் அடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக அந்த குழுவின் தலைவர் சாந்த வல்பலகே எமது செய்தி சேவைக்கு தெரிவித்தார்.

இதற்கமைய அடுத்த வாரத்திற்குள் குறித்த அறிக்கையை வெளியிட முடியும் என அவர் குறிப்பிட்டார்.

எரிவாயு வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் இதுவரையில் லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் நிறுவனங்களின் தலைவர்கள், உயர்மட்ட அதிகாரிகள் உள்ளிட்ட சகல தரப்பினரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

எரிவாயு நிறுவனங்கள், களஞ்சியசாலை வளாகங்கள், எரிவாயு விநியோக நிலையங்கள் மற்றும் எரிவாயு விற்பனை நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எரிவாயு வெடிப்பு சம்பவங்கள் பதிவான இடங்களிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் எரிவாயுவின் செறிவு தொடர்பிலும் இரசாயன பகுப்பாய்வு நடத்தப்பட்டுள்ளதாக எரிவாயுவுடன் தொடர்புடைய வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விசேட நிபுணர் குழுவின் தலைவர் சாந்த வல்பலகே தெரிவித்தார்.

இதற்கமைய, அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ள அறிக்கையில் எரிவாயு வெடிப்புக்களுக்கான காரணங்கள் மற்றும் அவற்றை தடுப்பதற்கான பரிந்துரைகள் என்பன வெளிப்படுத்தப்படவுள்ளன.

# ரயிலில் மோதி பெண் ஒருவர் பலி

பயாகல எலகஹவத்த புகையிரத கடவையில் பெண் ஒருவர் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் காலி நோக்கி பயணித்த புகையிரதத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளில் இருவர் பயணித்துள்ளதுடன், விபத்தில் பெண் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் பயாகல பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடைய பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் நாகொட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.புகையிரத கடவையில் பொருத்தப்பட்டுள்ள சமிக்ஞை அமைப்பை சீர் செய்யாமையால் இவ்வாறு பல விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த இருவருக்கு விளக்கமறியல்

கிண்ணியா குறிஞ்சாக்கேணி இழுவைப் படகு விபத்தின் போது, வீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் கைதான, பிரதான சந்தேக நபர்கள் இருவரையும், இம்மாதம் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை நீதிமன்ற நீதிவான் ரஸாக் பயாஸ் உத்தரவிட்டுள்ளார்.

குறிஞ்சாக்கேணி மற்றும் காக்காமுனைப் பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 25 வயதுடைய இருவரே, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.கிண்ணியா குறிஞ்சாக்கேணி இழுவைப் படகு கவிழ்ந்ததில், எட்டுப் பேர் உயிரிழந்த நிலையில், அங்குள்ள இளைஞர்கள் சிலர், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதுடன், அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தது மாத்திரமன்றி, ஊடகவியலாளர்களை தாக்கியும், அவர்களின் கையடக்கத் தொலைபேசிகளை திருடியும் சென்றனர்.

இந்நிலையில், குறித்த சம்பவத்தின் பிரதான சந்தேக நபர்கள் குறித்து, கிண்ணியா பொலிஸார் மற்றும் புலனாய்வுத்துறையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில், இருவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இரத்ததான முகாம்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீஅற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும், குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து இன்று ஞாயிற்றுக்கிழமை இரத்ததான முகாமொன்றை நடத்தவுள்ளனர்.

இம்முகாம் கோண்டாவில் ஈழத்துச் சபரிமலை ஐயப்பன் கோயில் அருகாமையில் அமைந்துள்ள குட்டிச் சுட்டி முன்பள்ளியில் காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் இரத்ததானம் முகாம் நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 0778997115 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

# இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட ஆறரைக் கோடி ரூபா பெறுமதியான கார்




இலங்கையில் வாகனங்கள் இறக்குமதிக்கு தொடர்ந்து தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், ஜப்பானில் தயாரிக்கப்பட்ட Toyota Land Crusher 300 அதிநவீன கார் ஒன்று ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் வந்திறங்கியுள்ளது.இந்தக் காரின் மதிப்பு, இலங்கைப் பெறுமதியில், சுமார் ஆறரைக்கோடி எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஹம்பாந்தோட்டை துறைமுக அதிகாரி ஒருவர் இது குறித்து தெரிவிக்கும் போது, அமெரிக்கத் தூதரகத்தினால், இந்தக் கார் வரியின்றி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், வாகனங்களின் இறக்குமதியை அரசாங்கம் இடைநிறுத்துவது, தூதரகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தாதெனவும், தெரிவித்தார். அந்தக் கார் வேறொருவரினாலும், இறக்குமதி செய்யப்படவில்லையென்றும், அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கு வருகை தரும் சிறுவர்கள் தொடர்பில் வெளியாகியுள்ள அறிவிப்பு

வெளிநாட்டிலிருந்து, இலங்கைக்கு வருகை தரும் 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு, பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கை அவசியமில்லையென, சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் இலங்கைக்கு வருவதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் பெறப்பட்ட, கொவிட் தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தும், பி.சி.ஆர். அறிக்கையை, விமான நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார். இலங்கைக்கு வருகை தந்த ஒருவருக்கு, கடந்த மூன்று மாதங்களிற்குள், கொவிட் தொற்று ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்த, 48 மணித்தியாலங்களுக்குள் பெறப்பட்ட விரைவான அன்டிஜன் அறிக்கை போதுமானதெனவும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார். மேலும், அவர்கள் தேவையான ஆவணங்களை வைத்திருக்க வேண்டுமென்றும், அவர் மேலும் தெரிவித்தார்.



# பண்டிகைக் காலத்தில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படமாட்டாது

## -சூசகமாக அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு-



பண்டிகைக் காலத்தில் கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்கான இலகுவான வழி ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதே என பலர் கூறினாலும், அத்தகைய நடவடிக்கையினால் உள்ளூர் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

பண்டிகைக் காலங்களில் பொதுமக்கள் அனைவரும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டியது அவசியமானது.

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலப்பகுதியில் நடத்தப்படும் அனைத்து குடும்ப ஒன்றுகூடல்கள் மற்றும் விழாக்களுக்கு கட்டுப்பாடுகளை விதிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றத் தவறினால் சித்திரை புத்தாண்டுக் கொத்தணி உருவானதைப் போன்று புதிய கொத்தணி உருவாகக் வழிவகுக்கும் என்பதை நாம் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை திருப்திகரமான வகையில் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் நாடு இதுவரை அடைந்துள்ள முன்னேற்றத்தை மக்கள் பாதுகாக்க முன்வர வேண்டும்.

கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்கான இலகுவான வழி ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதே என பலர் கூறினாலும், அத்தகைய நடவடிக்கையினால் உள்ளூர் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# வவுனியாவில் பஸ்ஸுக்கு காத்திருந்தவர் மீது தாக்குதல்



தாக்குதலுக்குள்ளான நபர் கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவில் வாகனம் ஒன்றை பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற நிலையில், அன்றைய தினம் அங்கிருந்து இரவு 11 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு திரும்புவதற்காக

வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அருகில் பஸ்ஸுக்காக காத்திருந்தார். இதன் போது மகேந்திரா வாகனமொன்றில் வந்திறங்கிய ஆறு பேர் அவர் மீது சரமாரியான தாக்குதலை மேற்கொண்டதுடன் அவரிடமிருந்த தங்க நகைகளையும் அபகரித்து தப்பி சென்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு வாகனமொன்றை வாங்குவதற்காக சென்றிருந்தவர் மீது வாகனமொன்றில் வந்த சிலர் தாக்குதல் நடத்தியதில் அவர் படுகாயமடைந்துள்ளார்.

இத்தாக்குதல் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அருகில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

# மன்னாரில் 10 நாட்களில் 144 கொரோனா தொற்று

மன்னாரில் கடந்த 10 நாட்களில் 144 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, புதிதாக 2 மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக அம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட கொரோனா நிலைவரம் தொடர்பாக நேற்று சனிக்கிழமை அவர் மேலும் தெரிவிக்கையில்:

மன்னாரில் கடந்த 10 நாட்களில் 144 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.இந்நிலையில் மன்னார் மாவட்டத்தில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 3060 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை இரவு 2 கொரோனா மரணங்கள் பதிவாகி உள்ளது.

அதாவது பள்ளிமுனையைச் சேர்ந்த 59 வயதுடைய பெண்ணொருவரும்; உப்புக்குளம் பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய பெண்ணொருவருமே மரணமாகியுள்ளனர்.

இதன் பிரகாரம் மாவட்டத்தில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது என தெரிவித்தார்.

# வல்லைப் பாலத்தில் கப் ரக வாகனம் விபத்து:சாரதி படுகாயம்



வீதிப் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் நிறுவனமொன்றுக்குச் சொந்தமான கப் ரக வாகனமொன்று நேற்றுச் சனிக்கிழமை பிற்பகல் யாழ். வல்லைப் பாலத்தடியில் விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

விபத்தில் கப் ரக வாகனம் கடுமையாகச் சேதமடைந்துள்ள அதேவேளை காயமடைந்த சாரதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை விபத்து தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (18, 75)

# தேசிய உற்பத்தித் திறன் போட்டியில்இரண்டாவது முறையாகவும் கிளிநொச்சி முதலாமிடம்

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடாத்தப்படுகின்ற 2020க்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் இரண்டாவது தடவையாகவும் முதலிடத்தை பெற்றுள்ளது.

கடந்த நவம்பர் 25 திகதியன்று தேசிய உற்பத்தித்திறன் செயலக குழுவினர் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் உள்ள ஒவ்வொரு கிளைகளையும் பார்வையிட்டு மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளனர்.



இவ்வாறான நிலையில் தேசிய உற்பத்தித்திறன் செயலகம் போட்டி முடிவு தொடர்பான பட்டியலை நேற்று சனிக்கிழமை வெளியிட்டது.

இதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் முதலிடத்தை இரண்டாவது தடவையாகவும் பெற்றுக் கொண்டுள்ளது. (52).

# கஞ்சா சுருட்டுடன் இளைஞர் கைது



யாழ்.நகரில் கஞ்சா சுருட்டுடன் இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இளைஞன் சுன்னாகம் பகுதியை சேர்ந்தவர் என கூறப்படுகின்றது.

# நல்லூரில் அடுப்பு வெடிப்பு; எவருக்கும் பாதிப்பு இல்லை

நல்லூர் பகுதியில் நேற்று அதிகாலை 4 மணியளவில் சமையல் எரிவாயு அடுப்பொன்று வெடித்துள்ளது.

காலை உணவு சமைத்துக் கொண்டிருந்த போதே இந்த அடுப்பு வெடித்ததாக கூறப்படுகின்றது.

சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணை நடத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சுனாமி அனர்த்த நினைவுகூரலை சிறப்பாக நடத்த குழு நியமிப்பு



முல்லைத்தீவில் சுனாமியினால் மரணித்தவர்களை நினைவு கூருவதற்கான நிகழ்வினை உணர்வுபூர்வமாக நடத்தும் வகையில் செயற்பாட்டு குழுவொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

2004 டிசம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் போது முல்லைத்தீவில் 3,000 இற்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். இவ்வாறான நிலையில் இதன் 17 வருட நினைவினை

மிகவும் உணர்வுபூர்வமாக நடத்தம் வகையில் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் கமல.விஜிந்தன் தலைமையில் கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விசேட கூட்டம் இடம்பெற்றது.இதில் மதத்தலைவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், தனியார் போக்குவரத்து சங்கத்தினர,; வர்த்தக சங்கத்தினர் மற்றும் பிரதேச சமூகமட்ட அமைப்புக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது நினைவேந்தல் நிகழ்வு ஒழுங்குபடுத்தலுக்கான செயற்பாட்டு குழுவொன்று தெரிவு செய்யப்பட்டது.

அத்துடன் இது தொடர்பான அடுத்த கூட்டத்தனை எதிர்வரும் 23 திகதி முற்பகல் 10 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தலைமை காரியாலயத்தில் நடத்துவதற்கும் தீமானிக்கப்பட்டுள்ளது. (27)

# அரியாலையில் இன்று இலவச பயிற்சி முகாம்

அரியாலையில் இலவச ஒரு நாள் அழகுக்கலைப் பயிற்சி முகாமொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இம் முகாம் ஏ-9 வீதியின் 30/2 பண்ணை வளவு அரியாலையில் அமைந்துள்ள ஞானதீபம் அமதிகள் இளையோர் திறன் விருத்தி மையத்தின் அலுவலகத்தில்நடைபெறவுள்ளது.

கடந்த ஒரு வருட காலமாகப் பயிற்சி பெற்ற மாணவிகளினால் நடாத்தப்படும் குறித்த முகாமில் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற முடியுமென ஞானதீபம் அமதிகள் இளையோர் திறன் விருத்தி மையத்தின் இயக்குநர் அருட்பணி யூட் கறோவ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

# பல்லவராயன்கட்டில் காணியை விநியோகிக்க பதிவு முன்னெடுப்பு



பூநகரி பிரதேச செயலக பிரிவின் கீழ் உள்ள பல்லவராயன்கட்டுப் பகுதியில் வனவளத் திணைக்களத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகளை மக்களுக்கு பிரித்தளிப்பதற்கான பதிவுகள் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதாவது கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவினால் முயற்சியினையடுத்து வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்பவற்றின் பிடியிலிருக்கும் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளை மக்கள் பாவனைக்கு விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காணியமைச்சரைப் பணித்திருந்தார். இதன் பிரகாரம் பல்லவராயன் கட்டுப் பகுதியிலுள்ள சுமார் 100 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே இக்காணிகளை மக்களுக்கு பிரித்தளிப்பதற்கான பதிவுகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப்பாளரும், முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான வைத்தியநாதன் தவநாதன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இதில் பூநகரி பிரதேச செயலாளர் கிருஷ்ணேந்திரன் உள்ளிட்ட அலுவலர்கள் பதிவை மேற்கொண்டனர்.

இந்தப் பதிவுகளின் அடிப்படையில் பொருத்தமான பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு, விரைவில் காணிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளது. (27)

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு புளொட் உதவி

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நான்கு கிராமங்களிலுள்ள 100 குடும்பங்களுக்கு புலம்பெயர்ந்தவர்களின் உதவியுடன் உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் புளொட் அமைப்பினால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அதாவது சிலாவத்தை, கற்சிலைமடு, மாங்குளம் மற்றும் மன்னாகண்டல் ஆகிய கிராமங்களுக்கு நேரடியாகச் சென்ற புளோட் அமைப்பினர் கடந்த சிலநாட்களாக இப்பொதிகளை வழங்கி வந்த நிலையில் இதன் இறுதி நிகழ்வு நேற்று பிற்பகல் மன்னாகண்டல் கிராமத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு முன்னாள் வட மாகாண அமைச்சர்; கந்தையா சிவநேசன் தலைமையில் இடம் பெற்றது.



இதில் புளொட் அமைப்பின் யூட் மற்றும் மாதவன், பிரதேச சபை உறுப்பினர் தம்பியன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனா.


# இலங்கையின் புதிரான நீர்ப்பறவைகளின் மர்மமான புலம்பெயர் பயணங்கள்

இலங்கையில், பறவைகள் இடம்பெயர்தல் ஆய்வுகளில் ஒரு முக்கிய மைல்கல்லை நாங்கள் எட்டுகிறோம். எங்களின் ஜிபிஎஸ்-குறியிடப்பட்ட ஒரு பறவை ஹியூக்லின்ஸ் கல்ஸ் ('மணிகே' எனப் பெயரிடப்பட்டது) முழு இடம்பெயர்வு சுழற்சியை (இலங்கை முதல் சுற்றுப்பயணம் ஐரோப்பிய ஆர்க்டிக் மற்றும் மீண்டும் இலங்கை வரை 19,360 கிமீ) முடித்துவிட்டு மீண்டும் மன்னாருக்கு வந்தடைந்தது. பேராசிரியர் சம்பத் செனவிரத்ன மற்றும் செல்வி கயோமினி பனாகொட தலைமையிலான எங்கள் குழுவினரால் ஏப்ரல் 2021 இல் மன்னார் தீவின் தலைமன்னாரில் ஹியூக்லின் கல்ஸ் (Gull) ஜிபிஎஸ்- குறியிடப்பட்டது. ஹியூக்ளின்ஸ்களில் ஒன்று ('மணிகே') விடுவிக்கப்பட்டதும் வடக்கே புறப்பட, மற்ற பறவை ('மெனிகே') இன்னும் 20 நாட்கள் தங்கியிருந்து ஏப்ரல் பிற்பகுதியில் மன்னாரை விட்டு வெளியேறியது.









ரஷ்யாவின் வடக்குப் பகுதி வரை பயணித்த மேகா, முதலில் ஆர்க்டிக் பகுதியின் யமல் தீபகற்பத்தில் தனது இனப்பெருக்கத்தளத்திற்கு மே மாதத்தின் நடுப்பகுதியில் சென்றடைந்தது. மெனிகே விரைவில் மேகாவை பின்தொடர்ந்து, சற்று வித்தியாசமான பாதையில் யமல் தீபகற்பத்தை மெனிகே சென்றடைந்தது. மெனிகே யூரல் மலைகளைக் கடந்து, ஐரோப்பிய ரஷ்யாவிற்கூடாக யமல் தீபகற்பத்தில் கூடு கட்டும் இடத்தினை சென்றடைந்தது.

ஆர்க்டிக் கோடையில் ஆகஸ்ட் பிற்பகுதி வரை அங்கேயே தங்கியிருந்த மெனிகே முதலில் திரும்பி, தெற்கு நோக்கி இடம்பெயர்ந்தது. மேகா தனது தெற்கு நோக்கிய பயணத்தினை சற்று தாமதமாக ஒக்ரோபர் தொடக்கத்தில் ஆரம்பித்தது. சீக்கிரம் புறப்பட்ட மெனிகே, இலங்கையில் இருந்து புறப்பட்டு ஆறு மாதங்கள் மற்றும் ஒன்பது நாட்களுக்குப் பிறகு நவம்பர் நான்காம்திகதிதனது குளிர்கால இடமான மன்னாரை முதலில் வந்தடைந்தது. மெனிகேயினது பாதுகாப்பான வருகையுடன், முழு இடம்பெயர்வு சுழற்சியை நிறைவு செய்யும் எங்களின் முதல் குறியிடப்பட்ட பறவையாக மெனிகே ஆகிறது. இலங்கையிலிருந்து ஐரோப்பிய ஆர்க்டிக்பகுதிக்குபயணித்த முதல் (அறியப்பட்ட) பறவையும் இதுவே.

இந்த காவிய பயணத்தின் போது

> மன்னாரிலிருந்து ஆர்க்டிக் மற்றும் மீண்டும் மன்னார் வரையிலான தனது முழு புலம்பெயர்ந்த பயணத்தின் போது மெனிகே கடந்து வந்த மொத்ததூரம் கிட்டத்தட்ட 20,000 கிலோமீற்றர்களாகும்.

மெனிகே கடந்து வந்த நேரம் மற்றும் தூரங்கள் பின்வருமாறு. எட்டாயிரம் கிலோமீற்றர்கள் (7,880 கிமீ) தூரத்தை கடக்க மெனிகே தனது வடக்குப் பயணத்திற்காக மொத்தம் 35 நாட்கள் (05 வாரங்கள்) செலவிட்டது. மெனிகேயினது தெற்குப் பயணம் மெதுவாக இருந்தது அது 91 நாட்கள் (13 வாரங்கள்) எடுத்தது.

இதன் போது மெனிகே பதினொன்றாயிரம் கிலோமீற்றர்கள் (11,480 கிமீ) தூரத்தை முடித்தது. இது மொத்தம் கிட்டத்தட்ட இருபதாயிரம் கிலோமீற்றர்கள் (19,360 கிமீ) - மன்னாரிலிருந்து ஆர்க்டிக் மற்றும் மீண்டும் மன்னார் வரையிலான தனது முழு புலம்பெயர்ந்த பயணத்தின் போது மெனிகே கடந்து வந்த மொத்ததூரமாகும். மேகாவும் தற்போது தனது தெற்கு நோக்கி நகர்வதற்கான இறுதி கட்டத்தில் உள்ளது.

ஹியூக்லின் கல் (Gull) என்பது ஒரு பெரிய வெள்ளைத் தலை கொண்ட கல் (Gull) ஆகும், இது இலங்கையின் வடமேற்கு மற்றும் வடக்கு கரையோரப் பகுதிகளில், புலம்பெயர் பருவத்தில் மட்டுமே காணப்படுகிறது. இது லெஸ்ஸர் பேக்-பேக்டு கல் (லாரஸ் ஃபஸ்கஸ்) வளாகத்தில் உறுப்பினராக உள்ளது. இதில் ஐந்து ஒத்த தோற்றமுள்ள கல் (Gull)கள் உள்ளன. தெற்காசிய குளிர்கால லாரஸ் ஃபஸ்கஸ் கல்லின் இடம்பெயர்வு மற்றும் இனப்பெருக்கம் ஆகியவை நன்கு புரிந்து கொள்ளப்படவில்லை. மனிகே மேகா தெற்காசியாவில் முதன்முதலில் குறியிடப்பட்ட பெரிய கல்(Gull) கள். எனவே, இந்த இனங்களின் அறியப்படாத இடம்பெயர்ந்த நடத்தையைப் புரிந்துகொள்வதில் அவை வழங்கும் மகத்தான தரவு விலைமதிப்பற்றதாக இருக்கும்.

இந்த ஆய்வு, பேராசிரியர் சம்பத் செனவிரத்ன (முதன்மைபுலனாய்வாளர்) அவர்களால் வழிநடத்தப்படும் ஒரு கூட்டு ஆய்வாகும். அதே நேரத்தில் செல்வி கயோமினி பனாகொட இந்த திட்டத்தின் கீழ் தனது கலாநிதி (PhD) படிப்பை மேற்கொண்டு முக்கிய துணை-ஆராய்ச்சியாளராக பணியாற்றுகிறார்.

இந்த ஆய்வில், கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையின் இலங்கையின் புல பறவையியல் குழு (FOGSL) (பேராசிரியர் சரத் கொட்டகம தலைமையில்) மற்றும் சீன அறிவியல் அகாடமியின் சுற்றுச்சூழல்-சுற்றுச்சூழல் அறிவியல் ஆராய்ச்சி மையம் (பேராசிரியர் லீ காவ் மற்றும் அவரது குழு) ஆகியவற்றுக்கு இடையே உள்ள தொழில்நுட்ப கூட்டாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த ஆராய்ச்சிக்காக முதன்மையாக பல்மைரா ஹவுஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் மன்னார் வாயு ரிசார்ட் ஆகியவற்றால் நிதியளிக்கப்படுகிறது. இவ்வாய்வில், சர்வதேச ஈரநிலங்கள் அமைப்புபங்குதாரராகஉள்ளது. மேலும் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் மற்றும் இலங்கை கடற்படை ஆகியவை அனுமதிப்பத்திரங்கள் மற்றும்தள-அனுமதி மூலம் உதவிகளை வழங்குகின்றன.

**இலங்கையின் புல பறவையியல் குழு (FOGSL), கொழும்பு பல்கலைக்கழகம்**






# பிள்ளைகளை வளர்த்தெடுப்பதற்கு வாழ்வாதார உதவி செய்யுங்கள்

விசுவமடு, புன்னைநீராவியைச் சேர்ந்தவர் விஜயகுமார் யோகா. (வயது - 38). இவரது கணவர் விஜயகுமார் 2009ஆம் ஆண்டு வலைஞர்மடம் பகுதியில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டு விட்டார்.

மூன்று பிள்ளைகளின் தாயான யோகா தனது நிலை தொடர்பில் எமக்குத் தெரிவிக்கையில், "கணவனின் இறப்பிற்குப் பின்னர் எவரது உதவியுமின்றி எனது மூன்று பிள்ளைகளையும் நானே வளர்த்து வருகின்றேன். பிள்ளைகள் மிகவும் கெட்டிக்காரர்கள். அவர்களை படிப்பித்து நல்ல நிலைக்கு ஆளாக்க வேண்டுமென்பதே எனது இலட்சியம்.

மூத்த மகள் திருமணம் முடித்து விட்டார். இரண்டாவது மகள் தரணிகா இவ்வருடம் நடைபெறவுள்ள க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ளார். அவர் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் கல்விகற்று வருகின்றார். கடைசி மகன் நிருபன் ஆரம்பக் கல்வியை விசுவமடு விசுவநாதர் ஆரம்பப் பாடசாலையில் கற்றார். 2019ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த தேசிய தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்திருந்தார். தற்பொழுது இடைநிலைக் கல்வியை விசுவமடு மகா வித்தியாலயத்தில் கற்று வருகின்றார்.

பிள்ளைகளின் படிப்புச் செலவை ஓரளவு என்னால் சமாளிக்கக் கூடியதாகவுள்ளது. நாளாந்த சீவியத்திற்கு தான் மிகவும் கஸ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். காமன்ஸ் ஒன்றில் வேலை பார்த்து வந்தேன். கடந்த ஒருவருடங்களாக அவ்வேலையை விட்டுவிட்டு வீட்டுடன் தோட்டம் செய்து வருகின்றேன்.

தென்னை மற்றும் வாழைப் பயிர்ச்செய்கை மேற்கொண்டு வருகின்றேன். வாழைப் பயிர்ச்செய்கை தான் தற்பொழுது கைகொடுத்து வருகின்றது. தென்னையும் காய்க்கும் பருவத்திற்கு வந்து விட்டது. நாளாந்த சீவியத்திற்கு தற்போது கிடைக்கும் வருமானம் போதாதுள்ளதால் ஆடு வளர்ப்பை மேற்கொள்ள விரும்புகின்றேன்.

எனது அம்மா ஆடு வளர்ப்பு மேற்கொண்டவர். அவருடன் சேர்ந்து நானும் ஆடு வளர்ப்பிற்கு உதவிகள் செய்தேன். அதனால் எனக்கு ஆடு வளர்ப்பில் அனுபவம் உள்ளது. ஆகையால் ஆடு வளர்ப்பிற்கு உதவி செய்தால் பேருதவியாகவிருக்கும். அதனைக் கொண்டு குடும்பச் சீவியத்தைச் சமாளித்துக் கொள்வேன்." என்று தெரிவித்தார்.

## அன்பளிப்பு



பெயர் குறிப்பிட விரும்பாத ஓர் அன்பர் அன்பளித்திருந்த ஒரு தொகுதி உலர் உணவுப் பொருட்கள் நாவற்குழி குடியேற்றத்திட்டத்தில் வசிக்கும் சில குடும்பங்களுக்கு அன்பளிக்கப்பட்டிருந்தது.

மேற்படி அன்பளிப்பினைப் பெற்றுக் கொண்ட பயனாளிகளை இங்குள்ள புகைப்படத்தில் காணலாம்.

# பாடசாலை சென்று வருவதற்கு துவிச்சக்கரவண்டி தாருங்கள்



கிளிநொச்சி, முழங்காவிலைச் சேர்ந்தவர் குமார் கலைப்பிரியன் (வயது - 13). இவர் 2019ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த தேசிய தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்திருந்தார். தற்பொழுது தரம் - 08 இல் முழங்காவில் மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) கல்வி கற்றுவருகின்றார்.

குடும்ப நிலை தொடர்பில் தாயார் கமலாதேவி (வயது - 51) தெரிவிக்கையில், "எனது கணவர் 2009ஆம் ஆண்டு மாத்தளன் பகுதியில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டு விட்டார். எனக்கு ஐந்து பிள்ளைகள். மூத்தமகன் யுத்தத்தின் போது காயங்களுக்குள்ளாகி பாரியளவில் வேலைகள் எதுவும் செய்யமாட்டார். இரண்டாவது மகள் திருமணம் செய்து விட்டார். மூன்றாவது மகன் கூலிவேலைகளுக்குச் சென்று வருகின்றான். நான்காவது மகள் கல்வியற் கல்லூரியில் கல்வி கற்று வருகின்றார்.

நான் சிறியளவில் ஒரு பெட்டிக்கடை போட்டு நடத்தி வருகின்றேன். அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே நாளாந்த சீவியத்தினை சமாளித்துக் கொண்டிருக்கின்றேன். எனக்கு வேறு உதவிகள் கிடையாது.

கடைசி மகன் மிகவும் கெட்டிக்காரன். அவன் பாடசாலைக்கு நடந்தே சென்று வருகின்றான். அவனுக்கு ஒரு துவிச்சக்கரவண்டி வழங்கினீர்கள் என்றால் அது எனக்குப் பேருதவியாகவிருக்கும். எனது பிள்ளையின் படிப்பே எனக்கு முக்கியம். அவர்களைப் படிப்பித்து நல்லநிலைக்கு ஆளாக்க வேண்டுமென்றே நான் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து வருகின்றேன். நான்காவது மகளைப் போல் கடைசி மகனும் நன்றாகப் படித்து பல்கலைக்கழகம் வரை செல்வான் என்று எண்ணுகின்றேன்." என்று கூறினார்.

# வாழ்வாதார உதவி வழங்கி வைக்கப்பட்டது





மாதகலைச் சேர்ந்த பி.வைலட் வழங்கியிருந்த 50ஆயிரம் ரூபா நிதியானது வன்னிப் போரிலே அங்கஅவயங்களை இழந்த மாற்றுத் திறனாளிகள் குடும்பத்திற்கு வாழ்வாதார உதவியாக வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

1ஆம் வட்டாரம், கைவேலியைச் சேர்ந்த முத்தையா இராஜேந்திரனுக்கு 25 ஆயிரம் ரூபா நிதி அன்பளிக்கப்பட்டிருந்தது. அந்நிதியைக் கொண்டு அவர் ஆடுவளர்ப்பிற்கான ஒரு கொட்டகையை அமைத்துக் கொண்டார்.

அம்பலவன் பொக்கணையைச் சேர்ந்த சந்திரகுமார் செல்வராணிக்கு 25 ஆயிரம் ரூபா நிதி அன்பளிக்கப்பட்டிருந்தது. அந்நிதியைக் கொண்டு அவர் தானும் மேலதிக பணத்தைப் போட்டு பசுமாடொன்றைக் கொள்வனவு செய்திருந்தார்.

பெற்றுக் கொண்ட உதவிகளுடன் இருவரும் நிற்பதை இங்குள்ள படங்களில் காணலாம்.

# உதவி தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்

வன்னி இறுதிப் போரில் பெற்றோரையிழந்த பிள்ளைகளுக்கு கல்வி உதவிகளும் கணவரையிழந்த அன்னையர்களுக்கு வாழ்வாதார உதவிகளும் எமது அமைப்பினூடாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை காலமும் எமது அமைப்பிடமிருந்து எதுவித உதவியும் பெற்றுக் கொள்ளாதவர்கள் தங்கள் விண்ணப்பங்களை எமக்கு தபால் மூலமாக அனுப்பி வைக்கலாம். விண்ணப்பதாரி வன்னி இறுதிப் போரில் பெற்றோரையிழந்ததற்கான அல்லது கணவரை இழந்ததற்கான மரணச் சான்றிதழின் போட்டோப்பிரதியுடன் தங்கள் வதிவிடம் மற்றும் வறுமைநிலையை உறுதிப்படுத்திய கிராம சேவகரின் கடிதம், தங்களின் குடும்பப் புகைப்படம், குடும்பப் பங்கீட்டு அட்டையின் போட்டோப்பிரதி என்பவற்றினை இணைத்து விண்ணப்பிக்கலாம். வன்னி இறுதிப் போரில் மேற்படி பாதிப்புக்குட்பட்டவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**
**"செயலாளர்"**
**யாழ்.தினக்குரல், கருணைப்பாலம்,**
**இல - 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# கருணைப்பாலத்தின்

## 2021 - ஆவணி, புரட்டாதி மாதங்களிற்குரிய கணக்கு விபரம்

| ப.இல | நிதி வழங்குனர் | தொகை | கா.இல | நிதி பெறுநர் | தொகை |
|---|---|---|---|---|---|
| 4554 | சுமனா கனகசபாபதி (அவுஸ்ரேலியா) | 50000.00 | 575862 | த.தனுஜன் (மீசாலை) | 205000.00 |
| 4555 | சி.விஜேந்திரன் (வெள்ளவத்தை) | 50000.00 | 575863 | பா.சத்தியதேவி (கிளிநொச்சி) | 12000.00 |
| 4556 | ஏ.அதீதன் (கல்வியங்காடு) | 10000.00 | 575863 | ச.கேசிகா (புத்துவெட்டுவான்) | 2000.00 |
| 4557 | Dr.S.நிறஞ்சன் (கண்டி) | 12000.00 | 575863 | க.சாமுவேல் (கைவேலி) | 2000.00 |
| 4558 | வி.சுவாமிநாதன் (கொழும்பு) | 10000.00 | 575863 | வசீகரன் நிசாயினி (வட்டக்கச்சி) | 2000.00 |
| 4559 | ஓர் அன்பர் (05.08.21 வங்கி) | 5000.00 | 575863 | கி.துஜனுஷா (நெடுங்கேணி) | 2000.00 |
| 4560 | இ.ஸ்ரீதரன் (அரியாலை) | 6000.00 | 575863 | கோ.கைலைராணி (பரந்தன்) | 3000.00 |
| 4561 | இ.ஸ்ரீதரன் (அரியாலை) | 10000.00 | 575863 | எஸ்.விஜயராணி (மிருசுவில்) | 3000.00 |
| 4562 | மொரட்டுவ பொறியியல் மாணவர்கள் | 12000.00 | 575863 | பா.மனோரஞ்சிதம் (கோம்பாவில்) | 5000.00 |
| 4563 | ஓர் அன்பர் (20.08.21 வங்கி) | 5000.00 | 575863 | ச.மேரிஅனிற்றா (மந்துவில்) | 2000.00 |
| 4564 | ஓர் அன்பர் (கொழும்பு) | 3000.00 | 575863 | யோ.அந்தோனியாப்பிள்ளை | 3000.00 |
| 4565 | வி.சுவாமிநாதன் (கொழும்பு) | 10000.00 | 575863 | ப.ஜெனித்தா (ஸ்கந்தபுரம்) | 3000.00 |
| 4566 | Dr.S.நிறஞ்சன் (கண்டி) | 12000.00 | 575863 | ர.நாகராணி (புதுக்குடியிருப்பு) | 3000.00 |
| 4567 | இ.ஸ்ரீதரன் (அரியாலை) | 6000.00 | 575863 | சி.கர்ணிகா (செல்வபுரம்) | 3000.00 |
| 4568 | இ.ஸ்ரீதரன் (அரியாலை) | 10000.00 | 575863 | க.விஜயகுமாரி (உருத்திரபுரம்) | 3000.00 |
| 4569 | ரி.சற்குணநாதன் (கொழும்பு) | 2000.00 | 575863 | ய.றிரோஜன் (கனகராஜன்குளம்) | 2000.00 |
| 4570 | பொ.நல்லைநாயகி | 5000.00 | 575863 | இ.வியாளம்மா (புதுக்குடியிருப்பு) | 10000.00 |
| 4571 | ஓர் அன்பர் (கொழும்பு) | 3100.00 | 575863 | கோ.காந்தரூபி (வள்ளிபுனம்) | 3500.00 |
| | **மொத்த நன்கொடை** | **221100.00** | 575864 | க.கருணாமலர் (நெடுந்தீவு) | 5000.00 |
| | | | 575864 | செ.சிவகாமி (கிளிநொச்சி) | 2000.00 |
| | | | 575864 | செ.இன்பரதி (தருமபுரம்) | 2000.00 |
| | | | 575864 | ஜீ.மாலதி (தேவிபுரம்) | 2000.00 |
| | | | 575864 | க.உ.தயபவானி (முள்ளியவளை) | 2000.00 |
| | | | 575864 | சி.சசிகலா (தேராவில்) | 2000.00 |
| | | | 575864 | என்.மிலானியூஸ் (பூநகரி) | 2000.00 |
| | | | 575864 | மு.செல்வலட்சுமி (பூநகரி) | 3000.00 |
| | | | 575864 | த.சரோஜினிதேவி (பூநகரி) | 3000.00 |
| | | | 575864 | சா.மகேஸ்வரி (உதயநகர்) | 2000.00 |
| | | | 575864 | கி.பவித்திரன் (நெடுங்கேணி) | 2000.00 |
| | | | 575864 | ஆ.டென்சிகா (கைவேலி) | 2500.00 |
| | | | 575864 | ஜெ.கேதீஸ்குமார் (துணுக்காய்) | 3000.00 |
| | | | 575864 | ச.லட்சுமி (மாங்குளம்) | 5000.00 |
| | | | 575864 | க.சோதிராணி (விசுவமடு) | 3000.00 |
| | | | 575864 | பி.சுதர்சினி (கோம்பாவில்) | 2000.00 |
| | | | 575864 | சி.யோகேஸ்வரி (கிளிநொச்சி) | 2000.00 |
| | | | 575864 | வி.இந்துமதி (தேராவில்) | 5000.00 |
| | | | 575864 | குா.சாருஜா (தேவிபுரம்) | 3500.00 |
| | | | 575864 | எஸ்.மிதுசன் (புதுக்குடியிருப்பு) | 2500.00 |
| | | | 575864 | க.ஜோதிலட்சுமி (இரத்தினபுரம்) | 5000.00 |
| | | | 575865 | நானாவித செலவீனம் | 10000.00 |
| | | | 575866 | பிரத்யங்கிரா அறக்கட்டளை | 600000.00 |
| | | | | அலுவலகச் செலவீனம் | 5750.00 |
| | | | 575867 | பா.சத்தியதேவி (கிளிநொச்சி) | 12000.00 |
| | | | 575867 | ச.கேசிகா (புத்துவெட்டுவான்) | 2000.00 |
| | | | 575867 | க.சாமுவேல் (கைவேலி) | 2000.00 |
| | | | 575867 | வசீகரன் நிசாயினி (வட்டக்கச்சி) | 2000.00 |
| | | | 575867 | கி.துஜனுஷா (நெடுங்கேணி) | 2000.00 |
| | | | 575867 | கோ.கைலைராணி (பரந்தன்) | 3000.00 |
| | | | 575867 | எஸ்.விஜயராணி (மிருசுவில்) | 3000.00 |
| | | | 575867 | பா.மனோரஞ்சிதம் (கோம்பாவில்) | 5000.00 |
| | | | 575867 | ச.மேரிஅனிற்றா (மந்துவில்) | 2000.00 |
| | | | 575867 | யோ.அந்தோனியாப்பிள்ளை | 3000.00 |
| | | | 575867 | ப.ஜெனித்தா (ஸ்கந்தபுரம்) | 3000.00 |
| | | | 575867 | ர.நாகராணி (புதுக்குடியிருப்பு) | 3000.00 |
| | | | 575867 | சி.கர்ணிகா (செல்வபுரம்) | 3000.00 |
| | | | 575867 | க.விஜயகுமாரி (உருத்திரபுரம்) | 3000.00 |
| | | | 575867 | ய.றிரோஜன் (கனகராஜன்குளம்) | 2000.00 |
| | | | 575867 | இ.வியாளம்மா (புதுக்குடியிருப்பு) | 10000.00 |
| | | | 575867 | கோ.காந்தரூபி (வள்ளிபுனம்) | 3500.00 |
| | | | 575867 | கே.கமலாதேவி (கோம்பாவில்) | 10000.00 |
| | | | 575867 | நா.உதயகுமாரி (கைவேலி) | 10000.00 |
| | | | 575867 | ந.அருந்தவராணி (கொடிகாமம்) | 5000.00 |
| | | | 575868 | க.கருணாமலர் (நெடுந்தீவு) | 5000.00 |
| | | | 575868 | செ.சிவகாமி (கிளிநொச்சி) | 2000.00 |
| | | | 575868 | செ.இன்பரதி (தருமபுரம்) | 2000.00 |
| | | | 575868 | ஜீ.மாலதி (தேவிபுரம்) | 2000.00 |
| | | | 575868 | க.உ.தயபவானி (முள்ளியவளை) | 2000.00 |
| | | | 575868 | சி.சசிகலா (தேராவில்) | 2000.00 |
| | | | 575868 | என்.மிலானியூஸ் (பூநகரி) | 2000.00 |
| | | | 575868 | மு.செல்வலட்சுமி (பூநகரி) | 3000.00 |
| | | | 575868 | த.சரோஜினிதேவி (பூநகரி) | 3000.00 |
| | | | 575868 | சா.மகேஸ்வரி (உதயநகர்) | 2000.00 |
| | | | 575868 | கி.பவித்திரன் (நெடுங்கேணி) | 2000.00 |
| | | | 575868 | ஆ.டென்சிகா (கைவேலி) | 2500.00 |
| | | | 575868 | ஆர்.சரோசா (அராலி) | 2000.00 |
| | | | 575868 | ச.லட்சுமி (மாங்குளம்) | 5000.00 |
| | | | 575868 | க.சோதிராணி (விசுவமடு) | 3000.00 |
| | | | 575868 | பி.சுதர்சினி (கோம்பாவில்) | 2000.00 |
| | | | 575868 | சி.யோகேஸ்வரி (கிளிநொச்சி) | 2000.00 |
| | | | 575868 | வி.இந்துமதி (தேராவில்) | 5000.00 |
| | | | 575868 | குா.சாருஜா (தேவிபுரம்) | 3500.00 |
| | | | 575868 | எஸ்.மிதுசன் (புதுக்குடியிருப்பு) | 2500.00 |
| | | | 575868 | க.ஜோதிலட்சுமி (இரத்தினபுரம்) | 5000.00 |
| | | | 575869 | நானாவித செலவீனம் | 10000.00 |
| | | | 575870 | நானாவித செலவீனம் | 12000.00 |
| | | | | அலுவலகச் செலவீனம் | 3500.00 |
| | | | | **மொத்தச் செலவீனம்** | **1118250.00** |

